11th November 1965]

களுக்கு வேறு வேறு நேரங்களில் லாபரட்டரி, ப்ராக்ட்டிகல் முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தான் புதிதாகக் கொண்டு வந்திருக்கிற திட்டத்தில் காலையில் 8 மணி முதல் 12 மணி வரையில் பள்ளிப் பாடங்கள் என்றும், மாலையில் 1 முதல் 5 மணி வரையில் ப்ராக்ட்டிகல் என்றும் பிரித்து வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, ஐந்து நாட்கள் மட்டும் வகுப்புகள் நடத்துகிற முறை பரிட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறினார் கள். எந்தக் காரணத்திற்காக, எந்த அடிப்படையில் இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மேல் நாடுகளில் இப்படித் தான் நடைபெறுகிறது. இந்தத் திட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்னால் சில மாணவர்களுக்கு ஒரு நாள் காலையில் பாடம், சிலருக்கு ப்ராக்ட்டிகல் என்று இருந்தது. இப்போது திருத்தி அமைத்ததில் எல்லா மாணவர்களுக்கும் காலை 8 முதல் 12 மணி வரை பாடம், மாலை நேரத்தில் ப்ராக்ட்டிகல் என்று திட்டவட்ட மாக ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த முறை பல மேல் நாடு களில் அனுஷ்டிக்கப்படுகிறது. அதைப் படிப்படியாகக் கொண்டு வரவேண்டுமென்று பரிட்சார்த்தமாக ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பயிற்சி நாட்களை 5 நாட்களாகக் குறைத்திருப்பது 6-வது நாள் மற்ற மாணவர்கள் பயிற்சி பெறு வதற்காகவா ? அல்லது பூர்ணமாக விடுமுறையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 6-வது நாள் படிப்பதற் காக. அவர்கள் தாங்களாகப் படித்து தகுதியை அதிகரித்துக் கொள்ள இப்போது அவகாசம் இல்லை, அவகாசம் வேண்டும் என்று செய்யப்பட்டிருக்கிறது.

Kodavanar Scheme

* 454 *Q.*—Sri S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to take up the Kodavanar Scheme in Vedasandur Constituency during the Fourth Five-Year Plan period?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லை.

Sri S. NANJUNDA ROW : In view of the acute shortage of food and the backwardness of Vedasandur, will the Government be pleased to modify the irrigation scheme and take up the Kodavanar Project?

The Hon. Sri V. RAMAIAH : With a view to increase food production, the Government have considered schemes in the Kodavanar on a number of occasions, if not in one big scheme, in a number of small schemes to tap the waters.